# புல்லட் ரயிலில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பயணம்!




டோக்கியோ,மே 30-

தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜப்பான் சென்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அங்கு புல்லட் ரயிலில் பயணம் மேற்கொண்டார். தனது புல்லட் ரயில் பயணம் குறித்த தகவலை தனது ட்விட்டர் பதிவில் மகிழ்வுடன் பகிர்ந்துள்ளார்.

ஒசாகா நகரிலிருந்து டோக்கியோவுக்கு புல்லட் ரயிலில் பயணம் செய்வதாகவும், ஏறக்குறைய 500 கி.மீ. தூர பயணத்தை இரண்டரை மணி நேரத்தில் கடந்து விடும் என அவர் தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

**ஜப்பான் என்றாலே சர்வதேச அளவில் மிகவும் பிரபலமானது புல்லட் ரயில்தான். அதிவேகமான இந்த ரயில் சேவை, பயண நேரத்தை பெருமளவு குறைக்கிறது. இதனால் தினசரி அலுவல் பயணத்திற்குக் கூட அங்கு புல்லட் ரயிலை பயன்படுத்துகின்றனர்.**

**உருவ அமைப்பில் மட்டுமல்லாமல் வேகத்திலும், தரத்திலும் புல்லட் ரயில்களுக்கு இணையான ரயில் சேவை நமது இந்தியாவிலும் பயன்பாட்டுக்கு வர வேண்டும். ஏழை, எளிய, நடுத்தர மக்கள் பயனடைந்து அவர்களது பயணங்கள் எளிதாக வேண்டும்.**

இவ்வாறு தனது விருப்பத்தை முதல்வர் அவர்கள் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் 2017-ஆம் ஆண்டு புல்லட் ரயில் சேவை தொடங்குவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மும்பை - அகமதாபாத் இடையே புல்லட் ரயில் சேவைக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மும்பை அகமதாபாத் இடையிலான தூரம் 508 கி.மீ. ஆகும். இந்தத் திட்டத்துக்கான மொத்த மதிப்பு ரூ.1,08,000 கோடியாகும். 6 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இத்திட்டத்தில் இதுவரை 30 சதவிகித பணிகள்தான் முடிவடைந்துள்ளன.





நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதிய சி.டி.ஸ்கேன் மையம் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிதாக கூடுதல் கட்டடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர். ஈஸ்வரன், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், திருச்செங்கோடு ஜல்லிக்கட்டு பேரவை தலைவருமான எஸ்.எம்.மதுரா செந்தில் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பால் உற்பத்தியாளர்கள் நலன் - பொது மக்களின் நலன்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாது!

# ஆவின் நிறுவனம் தொடர்ந்து பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை வழங்கும்!

## அமைச்சர் மனோ தங்கராஜ் உறுதி!



சென்னை, மே 30 -

பால் உற்பத்தியாளர்கள் நலன், பொதுமக்களின் நலன்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. ஆவின் நிறுவனம் தொடர்ந்து பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை வழங்கும் என பால் வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

ஆவின் 9763 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களையும், பல லட்சம் பால் உற்பத்தி செய்யும் உறுப்பினர்களையும், சுமார் 35,000 பணியாளர்களையும் கொண்ட, மிகப் பெரிய நிறுவனம் ஆகும்.

பால் உற்பத்தியாளர்களுக்கு நிலையான, சீரான மற்றும் நியாயமான விலை வழங்குவதையும், மக்களுக்கு குறைந்த விலையில் தரமான பால் மற்றும் பால் பொருட்களை வழங்குவதையும், இலக்காக கொண்டுள்ள நிறுவனமாகும். ஒன்றிய அரசின் பல்வேறு நடவடிக்கைகளாலும் வரி விதிப்புகளாலும், உணவு பொருட்களின் விலை அதிகரித்து, பால் உற்பத்தி செலவு உயர்ந்திருக்கிறது என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை.

பால் உற்பத்தியாளர்கள் விலையை உயர்த்தி தர வேண்டும் என தொடர்ந்து அரசுக்கு கோரிக்கை வைத்து வருகின்றனர். கழக அரசு பொறுப்பேற்றதின் தொடர்ச்சியாக, லிட்டருக்கு 3 ரூபாய் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. ஆவின் நிர்வாகத்தை பொறுத்த அளவில் பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரே சீரான விலையை அனைத்து காலங்களிலும் வழங்கி வருகிறது. இதை, வேறு எந்த நிறுவனங்களும் கடைப்பிடிப்பதில்லை.

மேலும், கால்நடைகள் வாங்க கடன் உதவி, கால்நடைகளுக்கு காப்பீடு, மருத்துவ உதவிகள், மற்றும் இனசேர்க்கை போன்ற திட்டங்களும் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி, பால் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ஊக்கத்தொகை, பங்கு ஈவுத்தொகை போன்றவற்றையும் வழங்கி வருகிறோம்.

பால் விற்பனையை பொறுத்தவரையில் வேறு எந்த நிறுவனங்களையும் விட மிக தரமானதாகவும், விலை குறைந்ததாகவும், பொது மக்களுக்கு ஆவின் வழங்கி வருகிறது. கடந்த காலங்களில் ஏற்பட்ட ஒரு சில பிரச்சனைகளை சரி செய்ய வேண்டுமென, தமிழக முதல்வரின் உத்தரவின் படி பல்வேறு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு வருகின்றது.

குறிப்பாக, நிர்வாகத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள், கணினிமயமாக்கல் மற்றும் தானியங்கி இயந்திரமயமாக்கல், புதிய பால் பொருட்கள் உற்பத்தி முறையான சந்தைப்படுத்துதல், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் கால்நடைகளின் நலத்தை பேணுதல், பால் உற்பத்தியை பெருக்கும் நடவடிக்கைகள், மற்றும் தர மேலாண்மை போன்றவற்றில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. விவசாயிகளின் அனைத்து கோரிக்கைகளும் பரிசீலித்து உரிய நேரத்தில் அவர்களின் கோரிக்கைகள் ஏற்று கொள்ளும் விதமாக உரிய நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டன.

வெகுவிரைவில், சீரான பால்கொள்முதல் , பால் பதப்படுத்துதல்,பால் பொருட்கள் தயாரித்தல் ,விற்பனையை முறைப்படுத்துதல், போன்ற நடவடிக்கைகளின் மூலம், முன்னேற்றம் ஏற்படும். வேறு நிறுவனங்கள் எதையும் கண்டு யாரும் அச்சப்படவில்லை. ஆனால், பொதுவாக ஒரு மாநிலத்தின் பால் உற்பத்தி பகுதியில் இன்னொரு மாநிலத்தின் பால் உற்பத்தி நிறுவனம் தலையிடுவதில்லை.

எனவேதான் தமிழக முதல்வர் அவர்கள் ஒன்றிய அரசுக்கு தமிழகத்தின் பால் உற்பத்தி பகுதியில் வேறு மாநிலங்களை சேர்ந்த நிறுவனங்களை அனுமதிக்க வேண்டாம் என கடிதம் எழுதினார். அதே நேரத்தில் தமிழகத்தில் பால் உற்பத்தியை பெருக்கவும்,பால் உற்பத்தியாளர்கள் மற்றும் கால்நடைகளின் நலனை பேணவும்,பால் கையாளும் திறனை அதிகரிக்கவும் உரிய அறிவுரைகளை தந்துள்ளார்கள்.

அவற்றை தீவிரமாக நடைமுறைப் படுத்தும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. எனவே எந்த விதத்திலும் பால் உற்பத்தியாளர்கள் நலன் மற்றும் ஆவின் வாடிக்கையாளர்களான பொதுமக்களின் நலன் என இரண்டிலும் எந்த பிரச்சனையும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த சூழ்நிலையில் யாரும் எந்த சலசலப்புக்கும் அஞ்சவேண்டாம். ஆவின் நிறுவனம் தொடர்ந்து பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை உற்பத்தி செலவை கணக்கில் கொண்டு வழங்குவதற்கும் அவர்கள் நலனை பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துகொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் இன்று

# சேலம் மத்திய மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஆர்.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!



சேலம், மே 30 -

சேலம் மத்திய மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறதென்று மாவட்டச் செயலாளர் ஆர். இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர். இரா. இராஜேந்திரன் எம். எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

முத்தமிழறிஞர். தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டுவிழா கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் ஜூன் 11ல் சேலம் வருகை குறித்து கழகத்தின் முதன்மை செயலாளர் கே.என். நேரு தலைமையில் இன்று (30,05,2023- செவ்வாய்க் கிழமை) காலை 10 மணிக்கு சேலம் 5 ரோடு ரத்தினவேல் ஜெயக்குமார் திருமண மண்டபத்தில் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற இருப்பதால். சேலம் மத்திய மாவட்ட கழக நிர்வாகிகள். தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட மாநகர பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொறுப்பாளர்கள், மாநகர, நகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை கழக, கோட்ட கழக, பகுதி கழக நிர்வாகிகள், சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த கழக செயல் வீரர்கள், கழகத்தின் அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உட்பட அனைவரும் தவறாமல் வருகை தந்து இக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி முதலமைச்சர் அவர்களின் சேலம் மாவட்ட சுற்றுப் பயணம் முழு வெற்றிபெற பெற செய்திட வேண்டுமாய் வேண்டி கேட்டுக் கொள்கிறேன். மேற்கண்டவாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சர்வதேச சிறுதானிய ஆண்டு மண்டல அளவிலான கண்காட்சி திருவிழாவினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார். உடன் கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி, மாவட்ட ஆட்சியர் திருமதி. சாந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி, எஸ்.பி.வெங்கடேஸ்வரன், முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன், கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணி மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசின் சீரிய திட்டங்களினால் சிறு தானிய உற்பத்தி உயர்ந்துள்ளது!

# தருமபுரியில் மண்டல அளவிலான சிறு தானிய திருவிழா - கண்காட்சி!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைத்து பேச்சு!

தருமபுரி, மே 30 -

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023, மண்டல அளவிலான சிறுதானிய திருவிழா, கண்காட்சியினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் (28.05.2023) அன்று தொடங்கி வைத்து, உழவர்களுக்கு இடுப்பொருட்களை வழங்கி விழாவில் சிறப்புரை ஆற்றினார்.

விழாவில் பேசிய அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் வேளாண் பெருமக்களின் நலன் காக்கும் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன் ஒரு பகுதியாக முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து கடந்த 2 ஆண்டுகளாக வேளாண்மை துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் சிறுதானியங்கள் சராசரியாக 8.67 இலட்சம் ஏக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் ஒப்பிடுகையில் தமிழ்நாடு அரசின் சீரிய திட்டங்களினால் சிறுதானிய உற்பத்தி திறன் வெகுவாக உயர்ந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை 2023 ஆம் ஆண்டினை "சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டு" என அறிவித்துள்ளதை தொடர்ந்து தமிழ்நாட்டில் தருமபுரி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் சிறுதானிய மாவட்டங்களாக தேர்வு செய்யப்பட்டு சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறுதானியகளை நமது அன்றாட வாழ்வில் உணவு பொருளாக தொடர்ந்து எடுத்துக்கொள்வதன் மூலம் நமது உடல் நலன் மேம்படுகின்றது.

தருமபுரி மாவட்டத்தின் மொத்த சாகுபடி பரப்பான 2 இலட்சத்து 48 ஆயிரத்து 400 ஹெக்டேர் பரப்பில், சோளம், கம்பு ராகி, வரகு, சாமை மற்றும் தினை ஆகிய சிறு தானியங்கள் மட்டும் சாரசரியாக 53 ஆயிரத்து 700 ஹெக்டேர் பயிரிடப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. சிறுதானியங்கள் சாகுபடி மற்றும் உற்பத்தியை அதிகரித்து மதிப்பு கூட்டப்பட்ட சிறுதானிய பொருட்கள் விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தருமபுரி மாவட்ட விவசாயிகளிடம் தருமபுரி, அரூர் மற்றும் பென்னாகரம் ஆகிய ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் மூலம் ராகி ஒரு கிலோ ரூ.35.78/க்கு இருந்து நேரடியாக கொள்முதல் செய்து பொது விநியோக திட்டத்தின் கீழ் 2 கிலோ அரசிக்கு பதிலாக 2 கிலோ ராகி தருமபுரி மற்றும் உதகை ஆகிய மாவட்டங்களில் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இவ்விழாவில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு ரூ.4000/ மதிப்பீட்டில் தென்னைகன்றுகளும், பேட்டரி தெளிப்பான் உள்ளிட்ட வேளாண் உதவிகளையும், மினிகிட் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு சாமைகளும், மலைவாழ் மக்களுக்கு சோலார் விளக்குப் பொறி, தென்னை மரம் ஏறும் கருவி, கோனோ வீடர், விதை மற்றும் கன்று (டிராகன் புரூட்) போன்ற பல்வேறு வேளாண் சார்ந்த பொருட்களை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து, வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மண்டல அளவிலான சிறுதானிய விழாவில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு கண்காட்சி அரங்குகளை பார்வையிட்ட அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர் செல்வம்,

தருமபுரி அரசு மாதிரி பள்ளியில் நடப்பாண்டில் 12ம் வகுப்பு முடித்து நல்ல மதிப்பெண்களுடன் சென்னையில் உயர்க் கல்வி பயில விரும்பும், பொருளாதாரத்தில் பின்தங்கிய 4 மாணவிகளின் கல்லூரிக் கனவை நிறைவேற்றும் வகையில் தலா ரூ.28,112/ என மொத்தம் ரூ.1.13 இலட்சம் தனது சொந்த நிதியிலிருந்து மாணவிகளுக்கு வழங்கி அவர்களுடன் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்துரையாடினார்.

இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் துணைவேந்தர் முனைவர். வெ. கீதாலட்சுமி, மாவட்ட ஆட்சித்தலைவர் கி.சாந்தி, ஜி.கே. மணி எம்.எல்.ஏ., எஸ்.பி.வெங்கடேஷ்வரன் எம்.எல்.ஏ., வேளாண் தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சி மைய இயக்குநர் ஷேய்க் என்.மீரா, தேசிய வேளாண் பூச்சிகள் தகவமைப்பு மைய இயக்குநர் ச. நா. சுசீல், முன்னாள் அமைச்சரும் மேற்கு மாவட்ட கழக செயலாளருமான பி.பழனியப்பன், கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி, தருமபுரி நகர்மன்றத் தலைவர் மா. லட்சுமி, முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எம்.ஜி.சேகர், தருமச் செல்வன், அலுவலர் லோகநாதன் உட்பட தொடர்புடைய அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!



புதுக்கோட்டை,மே30-

புதுக்கோட்டைவடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

ஜல்லிக்கட்டு போட்டியை வென்றெடுத்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களுக்கு ஜூன் 5ந்தேதி திங்கள்கிழமை புதுக்கோட்டையில் ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் நடத்தும் பாராட்டு விழா மாநாட்டில்கழகத்தோழர்கள்,பொதுமக்கள்திரளாக கலந்துகொள்வது தொடர்பானதொகுதிகழகநிர்வாகிகள் ஆலோசனை கூட்டங்கள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகிறது.

அதன் விபரம் வருமாறு:-

கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதி இன்று (30.5.2023 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி , இடம் ஒ.எஸ்.பி. திருமண மண்டபம், கீரனூர், விராலிமலை சட்டமன்ற தொகுதி நாளை (31.5.2023-புதன்கிழமை), காலை10மணி,இடம்எம். கே.எஸ் திருமண மகால், இலுப்பூர்.புதுக்கோட்டை சட்டமன்றதொகுதி,நாள்: 1.6.2023,வியாழக்கிழமை, மாலை 3 மணி, இடம்: கனகம்மன் திருமண மஹால், புதுக்கோட்டை.

கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள். நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், நகராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள் , துணைப் பெருந் தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக. முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் காங்கேயம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) வாணி, காங்கேயம் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் மகேஷ்குமார் உள்பட தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.